சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 32/2019**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.2-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜனார்த்தனன் | தொழில் | வங்கி கிளை மேலாளர். |
| தந்தை பெயர் | கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 45 |

**02.02.2026 முதல் விசாரணை**

சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சாட்சி நேரில் ஆஜர். நான் ஆரணி IDBI வங்கி கிளையில் மேலாளராக பணிபுரிகிறேன். எனது வங்கி பணியாளர் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. (அந்த பணியாளர் அடையாள அட்டை **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பிரதிவாதி ஜெயந்தி எங்கள் வங்கி கிளையில் கணக்கு வைத்து இருக்கிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான காசோலைகள் பிரதிவாதியின் வங்கி கணக்கு காசோலைகள் தான். 15.01.2016 முதல் 30.06.2016 வரையிலான பிரதிவாதியின் வங்கி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 15.02.2016ம் தேதி பிரதிவாதியின் வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்றால் 529 ரூபாய் 80 பைசா ஆகும். 15.03.2016ம் தேதி பிரதிவாதியின் வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்றால் 2167 ரூபாய் 80 பைசா ஆகும். 20.02.2016ம் தேதி பிரதிவாதியின் வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்றால் 529 ரூபாய் 80 பைசா ஆகும். 28.02.2016ம் தேதி பிரதிவாதியின் வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்றால் 529 ரூபாய் 80 பைசா ஆகும். 30.03.2016ம் தேதி பிரதிவாதியின் வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்றால் 627 ரூபாய் 80 பைசா ஆகும்.

**குறுக்கு விசாரணை**

1. வா.சா.ஆ.1, 3, 4 ஆகிய காசோலைகளில் தேதி 02 மாதம் 2016 ல் வரையப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2, 5 ஆகிய காசோலைகளில் தேதி 03 மாதம் 2016 ல் வரையப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 5 காசோலைகளில் உள்ள கோதண்டம் என்ற பெயரும் தொகை எழுதப்பட்ட மையும் வேறு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான காசோலைகளில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் என்னால் சொல்ல முடியாது வங்கியில் உள்ள கணினியல் சரிபார்த்தால் தான் தெரியும். வாதி கோதண்டன் எங்கள் வங்கி கிளையில் கணக்கு

வைத்திருக்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வங்கி கணக்கு அறிக்கையை நீதிமன்றம் கேட்டதன் பேரில் அளித்து இருக்கிறேனா என்றால் வழக்கறிஞர் கேட்டதன் பேரில் கொண்டு வந்து இருக்கிறேன்.